**HMOP NO. 62 /2023**
**Date 05.03.2026**
**.ம.சா.2 செல்லத்துரை**
**எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க மனுதாரர் அப்பாவுடன் வந்துள்ளேன். என்னுடைய அம்மாவும், மனுதாரருடைய பாட்டியும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். எதிர் மனுதாரரின் அப்பாவும் நானும் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். மனுதாரருக்கும், எதிர் மனுதாரருக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 13.12.2021ம் தேதியன்று நடைபெற்றது. எங்கள் ஊரில் 3 நாட்டாமை உள்ளார்கள் என்றால் சரிதான். திருமணத்தின்போது 3 நாட்டாமைகளும் இருந்தார்களா என்றால் சரிதான். தென்காசி நடுவர் நீதிமன்றத்தில் மனுதாரர் குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு எண். DVC12/2024 வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 27.09.2024ம் தேதியன்று தான் சாட்சியம் அளித்தேன் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. மேற்படி வழக்கில் 25.03.2024ம் தேதியன்று அளித்த சாட்சியத்தில் எதிர் மனுதாரர் எனது மகன் மீது கொடுத்த புகாரைப் பற்றி சொல்லியுள்ளேன் என்றாலும் தற்போது அதற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கும், எதிர் மனுதாரருக்கும் இடையில் சொத்து சம்மந்தமாக பல வருடங்களாக சண்டை இருந்து வருகிறது என்றால் சரியல்ல, நான் சாட்சி சொல்ல வந்த பின்னர் தான் பிரச்சனையாகிவிட்டது. திருமணத்தின்போது மனுதாரர் குடும்பத்தினர் எதிர் மனுதாரர் குடும்பத்திற்கு 18 பவுன் நகை என் முன்னால் கொடுத்ததாக சொன்னது பொய் என்றால் சரியல்ல. எதிர் மனுதாரரின் சகோதரரி என்ன படித்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் அக்ரி படித்துள்ளார். மேற்படி அவர் கல்வி கடன் பெற்று தான் படித்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். எதிர் மனுதாரரின் சகோதரரி திருமணத்திற்கு முன்பே விவசாயத்துறை அதிகாரியாக பணியில் இருந்தார் என்றால் சரிதான். எதிர் மனுதாரரின் சகோதரரியின் கணவர் தமிழ்நாடு

மின்சாரத்துறையில் பொறியாளராக இருக்கிறார் என்றால் சரிதான். எதிர் மனுதாரர் திருமணத்திற்கு முன்பே வீடு கட்டிவிட்டார் என்றால் திருமணம் பேசி முடிக்கப்பட்ட பின்னர் தான் வீடு கட்டினார். மனுதாரருக்கும், எதிர் மனுதாரருக்கும் வீடு கட்டி முடித்தப்பின்னர் தான் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். மனுதாரரிடம் ரூ. 1,80,000/- பணம் வாங்கி தான் வீடு கட்டினார்கள். மனுதாரரிடம் பணம் வாங்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிர் மனுதாரரின் சகோதரி படிப்பு செலவிற்காக எந்த ஒரு பணமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 15 பவுன் நகையை அடகு வைத்து வீடு கட்ட பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 21.09.2022 ம் தேதியன்று மனுதாரருக்கும், எதிர் மனுதாரருக்கும் சண்டை ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 10.03.2023 ம் தேதியில் எதிர் மனுதாரர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 21.09.2022 ம் தேதியன்று நான் சொல்வது போல எந்தவொரு சம்பமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் உடல் ரீதியாகவோ, மன ரீதியாகவோ துன்புறுதப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கும், எதிர் மனுதாரருக்கும் இடையில் பல காலமாக சண்டை இருந்து வந்ததால் தான் இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.